

# நபி (ﷺ) அவர்களுக்குப் பிரார்த்திக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்ட துஆக்கள்

தொகுப்பு: அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

هداية
جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# நபி(ﷺ) அவர்களுக்குப் பிரார்த்திக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்ட துஆக்கள்

1

حَسْبِيَ اللّٰهُ لَآ إِلَٰهَ إِلَّا هُوَ عَلَيْهِ تَوَكَّلْتُ
وَهُوَ رَبُّ الْعَرْشِ الْعَظِيمِ

ஹஸ்பியல்லாஹு லா இலாஹ இல்லா ஹுவ அலைஹி தவக்கல்து வஹுவ ரப்புல் அர்ஷில் அழீ(ظ)ம்

எனக்கு அல்லாஹ்வே போதுமானவன். (வணக்கத்திற்குரிய) நாயன் அவனையன்றி (வேறு யாரும்) இல்லை. அவன் மீதே நான் பரிபூரண நம்பிக்கை கொண்டுள்ளேன். அவன் தான் மகத்தான அர்ஷின் அதிபதி!

அல்குர்ஆன் 9:129

## நபி(ﷺ) அவர்களுக்குப் பிரார்த்திக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்ட துஆக்கள்

2

رَّبِّ اَدۡخِلۡنِىۡ مُدۡخَلَ صِدۡقٍ وَّاَخۡرِجۡنِىۡ مُخۡرَجَ صِدۡقٍ وَّاجۡعَلْ لِّىۡ مِنۡ لَّدُنۡكَ سُلۡطٰنًا نَّصِيۡرًا

ரப்பி அத்ஹி(خ)ல்னீ முத்ஹ(خ)ல ஸி(ص)த்கின் வஅஹ்(خ)ரிஜ்னீ முஹ்(خ)ரஜ ஸி(ص)த்கின் வஜ்அல்லீ மில்லதுன்க சுல்தானன் நஸீ(ص)ரா

என் இறைவனே! என்னை சிறந்த முறையில் நுழையச் செய்வாயாக! மேலும் சிறந்த முறையில் என்னை வெளிப்படுத்துவாயாக! மேலும் உன்புறத்திலிருந்து எனக்கு உதவி செய்யும் ஒரு சக்தியை ஆக்குவாயாக!

அல்குர்ஆன் 17:80

## நபி(ﷺ) அவர்களுக்குப் பிரார்த்திக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்ட துஆக்கள்

3

رَّبِّ زِدۡنِي عِلۡمٗا

ரப்பி ஸி(ز)த்னீ இல்மா

**இறைவா! கல்வி ஞானத்தை எனக்கு அதிகப்படுத்துவாயாக!**

அல்குர்ஆன் 20:114

## நபி(ﷺ) அவர்களுக்குப் பிரார்த்திக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்ட துஆக்கள்

4

رَّبِّ اَعُوْذُ بِكَ مِنْ هَمَزٰتِ الشَّيٰطِيْنِ ۙ‏ ﴿٩٧﴾

وَاَعُوْذُ بِكَ رَبِّ اَنْ يَّحْضُرُوْنِ

ரப்பி அவூதுபிக மின் ஹமஸா(ز)திஷ் ஷயாதீனி

வஅவூதுபிக ரப்பி அய்யஹ்ளுரு(ض)ரூன்

என் இறைவனே! ஷைத்தானின் தூண்டுதல்களிலிருந்து நான் உன்னைக் கொண்டு காவல் தேடுகிறேன். இன்னும் அவை என்னிடம் நெருங்காமலிருக்கவும், என் இறைவனே! உன்னிடம் காவல் தேடுகிறேன்.

அல்குர்ஆன் 23:97-98

# நபி(ﷺ) அவர்களுக்குப் பிரார்த்திக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்ட துஆக்கள்

5

رَّبِّ اغْفِرْ وَارْحَمْ وَأَنتَ خَيْرُ الرَّاحِمِينَ

ரப்பிஃ(غ)பி(ف)ர் வர்ஹம் வஅன்(த்)த ஹை(خ)ருர் ராஹிமீன்.

என் இறைவனே! நீ என்னை மன்னித்துக் கிருபை செய்வாயாக! நீ தான் கிருபையாளர்களிலெல்லாம் மிக்க மேலானவன்

அல்குர்ஆன் 23:118

# நபி(ﷺ) அவர்களுக்குப் பிரார்த்திக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்ட துஆக்கள்

6

قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِ ۝١ مِنْ شَرِّ مَا خَلَقَ ۝٢
وَمِنْ شَرِّ غَاسِقٍ اِذَا وَقَبَ ۝٣ وَمِنْ شَرِّ النَّفّٰثٰتِ فِى الْعُقَدِ ۝٤
وَمِنْ شَرِّ حَاسِدٍ اِذَا حَسَدَ ۝٥

குல் அவூது பி ரப்பில் ப(ف)லக். மின் ஷர்ரி மா ஹ(خ)லக்.

வமின் ஷர்ரி கா(غ)ஸிகின் இதா வகப்.

வமின் ஷர்ரின் நப்(ف)பாஸா(ث)(த்)தி பி(ف)ல் உகத்.

வமின் ஷர்ரி ஹாஸிதின் இதா ஹஸத்.

(நபியே!) நீர் சொல்வீராக! அதிகாலையின் இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன். அவன் படைத்தவற்றின் தீங்கை விட்டும், இருள் பரவும் போது ஏற்படும் இரவின் தீங்கை விட்டும், இன்னும், முடிச்சுகளில் ஊதும் பெண்களின் தீங்கை விட்டும், பொறாமைக்காரன் பொறாமை கொள்ளும் போது உண்டாகும் தீங்கை விட்டும் (காவல் தேடுகிறேன்).

அல்குர்ஆன் 113:1-5

# நபி(ﷺ) அவர்களுக்குப் பிரார்த்திக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்ட துஆக்கள்

**7**

قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِ ۙ﴿۱﴾ مَلِكِ النَّاسِ ۙ﴿۲﴾ اِلٰهِ النَّاسِ ۙ﴿۳﴾
مِنْ شَرِّ الْوَسْوَاسِ ۙ الْخَنَّاسِ ۙ﴿۴﴾ الَّذِیْ یُوَسْوِسُ فِیْ صُدُوْرِ النَّاسِ ۙ﴿۵﴾
مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ ﴿۶﴾

குல்அவூது பிரப்பின்னாஸ். மலி(க்)கின்னாஸ்.
இலாஹின்னாஸ். மின் ஷர்ரில் வஸ்வாஸில் ஹ(خ)ன்னாஸ்.
அல்லதீ யுவஸ்விஸு பீ(ف) ஸு(ص)தூரின்னாஸ்.
மினல் ஜின்னத்தி வன்னாஸ்.

(நபியே!) நீர் கூறுவீராக: மனிதர்களின் இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன். (அவனே) மனிதர்களின் அரசன், (அவனே) மனிதர்களின் நாயன். பதுங்கியிருந்து வீண் சந்தேகங்களை உண்டாக்குபவனின் தீங்கை விட்டும் (இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன்). அவன் மனிதர்களின் இதயங்களில் வீண் சந்தேகங்களை உண்டாக்குகிறான். (இத்தகையோர்) ஜின்களிலும், மனிதர்களிலும் இருக்கின்றனர்.

**அல்குர்ஆன் 114:1-6**